அடக்குமுறை ஆட்சி அவனியில் அதிகநாள் நிலவாது

எம்மைஅழிக்க நினைக்கும் ஆட்சிக்கு எச்சரிக்கை!

பழைமையும் பாசிசமும் ஒழியப் பாடுபடுவோம்

கழகம் அமைத்தோம் - கொள்கை காப்போம்

ஆக்கவேலை தொடங்குவோம் நாட்டுப்பணி புரிவோம்

——(0)——

கோவை நகரில் அண்ணுத்துரைச் சொற்பொழிவு

[கோவை நகர திராவிட முன்னேற்றக் கழகக் கிளையின் துவக்க விழாவின்பொருட்டு 16—10—49ல் நடைபெற்ற கோவை ஸ்டேடிய மைதானப் பொதுக் கூட்டத்தில், தோழர் சி. என். அண்ணுத்துரை ஆற்றிய சொற்பொழிவு கீழே தரப்படுகிறது.]

"அன்புள்ள தலைவர் அவா களே! தோழர்களே!

இன்று நாம் கூடியிருக்கிறோம் இங்கே, திராவிட முன்னேற்றக கழகத் துவக்க விழா நடத்த. இதே நேரத்திலே தமிழ்நாட்டின் நாலா பககங்களிலும் இதேபோன்ற விழாககள் நடநதுகொண்டிருக்கும்.

நாம் திராவிடர் கழகத்தை விட்டு விலகி வேறு கழகம அமைத்து வேலைசெய்கிறோம் ஏன்? எதற்காக? என்ன காரணம?

இந்தப் புதிய அமைப்பு ஸ்தாபனம்—திராவிட முனனேற்றக் கழகம் தோனற வேண்டிய, நிர்ப்பநத நிலை ஏன் ஏற்பட்டு விடடது?

நானும் எனது நணபாகளும பெரியார் திருமணத்தைக் கூடாது என்று கூறினேம் நாங்கள் மனதாரத் தவறு என்று நம்பினேம. வேணடினேம. வேதனைப்படடோம. இதனுல் புண்பட்ட நெஞ்சினராேனம. கழகத்தின் தீவிரத் தனமை, கொளகையிலே உள்ள தூய்மை, களங்கமற்ற தனமை, போகின்றனவே; பாழ்படுகின்றனவே, மாற்ருரும் எள்ளி நகையாடும நிலை ஏறபட்டுவிட்டதே என்று மனவருத்தப்பட்டோம். மகத தான, மிக ஆபத்தான சிக்கல் என்று மனதார நம்பினேன்; நான்மட்டுமல்ல, என்போனற எத்துணையோ பேர்கள், இளைஞர்கள், கழகத்தின்பால் அக்கறைகொண்டவர்கள், அனைவரும் அதே கருத்தைத் தான் தெரிவித்தனர். மனதாரத் தவறு, தகாத காரியம் என்று நமபியதால், எண்ணிய காரணத்தால்தான், அந்த ஏற்பாட்டை திருமண எண்ணத்தைக் கை விடுங்கள் என்று மன்ருடினேம். திருமணமே கூடாது எனறு சொல்ல நான் என்ன, ஆண் பெண் தொடர்பின மேம்பாட்டை அறியாத பாமரனு? வேதாந்தியா? அல்லது உலகையே வெறுத்து விட்ட துறவியா? மடாதிபதியா? ஜீயரா? அன்றி, லோக குருவா? அல்லவே! இககிருமணம பொருநதாத திருமணம், நமது கோட்பாட்டின படி, குறிககோளின படி, கொள்கையினபடி எனறு எடுததுக்காட்டினேம்.

நேரான காரணம் அல்லவே!

அப்போது பெரியாா ஒரே ஒரு காரணம், நேரான காரணம கூறியிருந்தால நிலைமை இப்படியாகியிருககாது அதாவது, இநதக கலயாணம செய துகொளவதானது, காதலுககாகத தான். என்று கூறியிருந்தாலாவது சறறு பொருததமிருநதிருககும. அப்போது மறுகக முடியாது எதிரகக முடியாது. ஏன்? காதலின சகதியை அறிநதவன் தான் நான. நான் என்ன கையிலே கமண்டலமும தணடமும் ஏந்தியவனு? கையிலே ஜபமாலையுமிலலை! கழுததிலே ருதஙிராடசமுமிலலை! இடையிலே புலியின தோல் ஆடையுமிலலையே! யானகசாலையில வசிக்கும சந்நியாசியலலவே நான, காதல, காதலின் சகதி எனன என பதை அறியாதிருக்க! அவர் நேராக, நான் அந்த அமமையுடன் ஆறு ஆண்டுகள் பழகினேன், காதல கொண்டோம இருவரும். கருத்தொருமித்துக் காதல் மணம் புரிந்து கொணடோம் என்று கூறியிருக்கலாம! கூறியிருந்தால், காதலுக்கு ஜாதியிலலை, மதமிலலை என்பதுபோல் வயதுமிலலைபோலும் என்று எண்ணியாவது எங்கள மனம் மாறியிருந்திருக்கக் கூடும். ஆனுல் பெரியாா கூறியதென்ன? கல்யாணம், திருமணம் எதற்கு? இயக்க நலன் கருதி. திராவிடர் கழகத்தை ஜாக்கிரதையாக நடத்த, அதனை எதிர்காலத்தில கண்ணியமாக நடத்த, பணத்தைப பாதுகாக்க, வாரிசாக்க, அதற்காக இப்படி ஒரு ஏற்பாடு, கல்யாணம் எனற பேரால் என்று சொன்னுர். அதுவும் ஏன் அப்படிச் செய்கிருர், அந்த அம்மையைத் தவிர வேறு எவர் மீதும் அவருக்கு நம்பிக்கையிலலை என்ற காரணத்தால்தானும்! யார் ஒப்புவர் இதனை? திருமணம் ஒரு ஏற்பாடு, எதிர் காலத்தில் திராவிடர் கழகம் ஒழுங்காக நடக்க! அதற்காக நம்பிக்கையானவர் எவருமில்லை, அம்மையாரைத் தவிர. அவரிடம் ஒப்புவிக்கிருர் பொறுப்பை, திருமணமூலம; அவர் கூறும் விளககம அது. இது சரியா?

தன்மானம் பறிக்கப்பட்டது

தோழர்களே! இந்த இடம் எவ்வளவு மனச் சிககல், மன வேதனை தருகிறது என்பதைச சற்று சிந்தித்துப் பாருங்கள். எனக்கு முன்னர் பேசிய திருப்பூர் தோழர் எஸ். ஆர். சுப்ரமண்யம் அவாகள் பேசிய போது குறிப்பிட்டபடி, பெரியார் ஒரு சர்வாதிகாரியாக விளங்கிஞர். நடந்தார். பொறுத்தோம். ஏன்? நாட்டுககுச் சேவை செய்யும் நல்லெண்ணம் கொண்டவர் அவர்; நாட்டிலே விழிப்புணர்ச்சியை ஊட்டியவர்

[தொடர்ச்சி 5-ம் பக்கம் பார்க்க]

Phone No. 4502
விலை அணு ஒன்று]
Regd. No. M. 5458
[இலங்கை 10 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C.N. அண்ணுதுரை M.A. MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்

மலர் 1 | சென்னை (24—10—49) வெளியூர் (25—10—49) | இதழ் 7X3

இந்திக்குப் பட்டாபிஷேகம்!

—Courtesy of Sankar's Weekly.

கையை விரிக்கிருர்!

அண்மையில் டில்லி சென்று திரும்பிய சென்னை உணவு இலாகா காரியதரிசி, தோழர் குற்ருலலிங்கம்பிள்ளை அவர்கள், "உணவுப்பொருள் விலைகள் மிகவும குறையவேண்டும் என்று இந்திய சர்க்கார் விரும்புகிறது. ஆனுல் சென்னை மாகாணத்தில் அவ்விதம் குறைப்பதற்கு இடமில்லை" என்று பத்திரிகை பிரதிநிதிகளிடம் கூறியிருக்கிருர்.

மாலை மணி

சென்னை 24—10—49 திங்கட்கிழமை

ஆத்மார்த்த போதனை அங்கு பலிக்குமா?

"எந்தவிதமான சமுதாய அமைப்பு இறுதியில் வெற்றியடையுமென்பது, மக்களின் தேவைகளை எது நிறைவேற்றவல்லது என்பதைப் பொறுத்ததாகும். மக்களின் தேவைகள் என்றால், லௌகிக வாழ்க்கைக்கான சாதனங்கள் மட்டுமன்றி மனித வாழ்க்கையின் மேன்மைக்கான ஆத்மார்த்திக அம்சங்களும் சேர்த்துத்தான்"

என்று ஆசியாவின் 'ஜோதி' அனைத்திந்தியாவின் முடிசூடா 'மன்னர்'—காஷ்மீர்பரம்பரையில் வந்த 'பண்டிதர்,' ஜவஹர்லால் நேரு 'இருண்ட' அமெரிக்காவில் வாழ்வோர்க்கு இதோபதேசம் புரிந்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் நிலைய நிருபர்கள் சங்கம் அளித்த வரவேற்புக்கு பதிலளிக்கும் முறையில்தான், மேற்கண்ட உபதேச மொழிகளைப் பண்டித நேரு திருவாய்மலர்ந்தருளியுள்ளார்.

மக்களின் தேவைகளை நிறைவேற்றவல்ல சமுதாய அமைப்பே இறுதியில் வெற்றிபெறும்—இது தோழர் நேரு கூறும் கருத்து. வரவேற்கவேண்டிய கருத்து—யாரும் மாறுபாடுகொள்ள இடமளிக்காத கருத்து. அந்த அமைப்பு எந்த அமைப்பு, அப்படிப்பட்ட அமைப்பு ஏதாவது தற்பொழுது நிலவுகிறதா, இல்லையாயின் அப்படிப்பட்ட அமைப்பு நிலவ ஏதாவது வழியிருக்கிறதா என்பனபற்றி ஏதாவது கூறியிருந்தால் கேட்போர்க்குத் தெளிவு பயப்பதாக இருந்திருக்கும் — இலக்கணத்தைச் சொல்லி இலக்கியத்தைச் சுட்டிக்காட்டியதாகப் புலப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட அமைப்பைத்தான் சுட்டிக்காட்ட மறந்தார் என்றால், கருத்தினைச் சொல்லி நிறுத்துகிற அளவோடாவது நின்றிருக்கலாம். தோழர் நேரு அந்த அளவோடு நிற்கமனமில்லாமல் 'உபதேச காண்டத்தில்' புகுந்துவிட்டார்.

தேவைகள் என்றால் லௌகிக வாழ்க்கைக்கான சாதனங்கள் மட்டும் அல்லவாம், ஆத்மார்த்திக அம்சங்களும் சேர்ந்தனதாமாம்! ஆத்மார்த்திக அம்சங்களுக்கு அப்படி என்ன அவசியமோ! நேரு அறிவிக்க மறந்துவிட்டார்! ஆத்மார்த்திக அம்சம் இதுவரையில் எதைச் சாதித்தது, அது இனிமேலும் தொடர்ந்து சாதிக்க வேண்டும் என்றுதோழர் நேரு கருதுகிறாரோ!

முதல் வாக்கியத்திலே இவ்வுலக மனிதராகக் காட்சியளிக்கும் தோழர் நேரு, இரண்டாவது வாக்கியத்தில் 'விண்டவர் கண்டிலர்' என்னும் 'பெருமை' படைத்த உலகிற்குத் தாவிச் செல்கிறார். ஏனோ தெரியவில்லை!

லௌகிகம் அதிகமாக நிரம்பிய அமெரிக்காவுக்கு, ஆத்மார்த்தம் அதிகம் நிரம்பிய இந்தியாவிலிருந்து சென்றிருக்கிறோமே என்ற எண்ணத்தினால், ஆத்மார்த்த அம்சங்களின் அவசியத்தைச் சொல்லுகிறாரோ, என்னவோ! அறியக்கூடவில்லை!

லௌகிகம் அமெரிக்காவில் எதைச் சாதிக்கத் தவறி விட்டது, அதை நிறைவேற்றி வைக்க ஆத்மார்த்தம் தேவைப்படுகிறது. மேலை நாடுகள் லௌகிகம் நிரம்பியன வென்றும், கீழை நாடுகள் ஆத்மார்த்தம் நிரம்பியன என்று சொல்லிக்கொள்வதிலே தோழர் எஸ். ராதாகிருஷ்ணனிலிருந்து, முச்சந்தியில் நிற்கும் மூவர்ணக் கொடிக்காரன் வரையில் ஒரு தனிப் பெருமிதங் கொள்கிறார்கள். ஆத்மார்த்தம் வளர்ந்துள்ள இந்த நாட்டில்தான் "வறுமை பெரிய பிரச்சினையாக இருக்கிறது எங்களுக்கு வேண்டியது உணவு' என்று தோழர் நேருவே அமெரிக்கர்களிடம் சொல்லியுள்ளார் இரண்டு மூன்று நாட்களுக்கு முன்.

ஆத்மார்த்தம், இந்தப் பரந்த உபகண்டத்தில் காணப்படும் மிதமிஞ்சிய வறுமை,பசி,பட்டினி, பிணி, சாக்காடு, இளமைச் சாவு, குழந்தை இறப்பு, கல்வியறிவின்மை, அறியாமை, குருட்டுப் பழக்கம், மூட நம்பிக்கை எதையாவது குறைக்க இம்மியளவாவது பயன்பட்டதா? லௌகிகம் வளர்ந்துள்ள நாட்டில் காணப்படும் வாழ்க்கைவசதிகளில், எந்த ஒன்றிலாவது இந்தியத் துணைக் கண்டம் வளர்ந்திருக்க முடிந்ததா? ஆத்மார்த்தம்தானே பண்டித நேருவை லௌகிகத்திடத்தில் 'பிச்சை' எடுக்கும்படி அமெரிக்காவிற்கு அனுப்பியுள்ளது கேட்கிறாரே தோழர் நேரு லௌகிக நாட்டைப் பார்த்து, "எங்கள் நாட்டில் வறுமை பெரும்பிரச்சினையாகஇருக்கிறது, உணவுகொடுத்து தவுங்கள்" என்று. அப்படி அவர் அங்கு சென்று கேட்பதற்கு, 'ஆத்மார்த்தம்' வெட்கப்படாமல்தானே உயிர்வைத்துக்கொண்டு உலாவி வருகிறது.

வேறு எந்த நாட்டிலும் தோன்றாத ஆண்டவர்கள், அவர்களின் அவதாரங்கள், அவர்களிடம் வரம் பெற்ற தேவர்கள், முனீஸ்வரர்கள், ரிஷிகள், ரிஷிகளின் பத்தினிமார்கள், லோககுருக்கள், ஆழ்வாராதிகள், நாயன்மார்கள், அவன் அருள் பெற்றோர்கள், அவனடியார்கள், முற்றுந்துறந்தோர் இப்படியாகப் பலரும் தோன்றினர் இந்நாட்டில். ஆத்மார்த்தத்தை வளர்த்தனர், என்றாலும் வறுமை, பஞ்சம், பசி, பட்டினி, பிணி, சாக்காடு நீங்கவில்லை—குறையவில்லை! இவர்களெல்லோர்க்கும் பிறகு கூட பண்டித நேரு 'ரிஷி' வேடம் புனைகிறாரே, ஏன்? அமெரிக்கர்கள் ஆத்மார்த்தத்தின் 'சாதனை'யைக் கண்டு மெச்சுவார்களென்றோ அல்லது அகமகிழ்ந்து அதற்குப் பரிசாக ஏதாவது தந்துவிடுவார்கள் என்றோ!

உலகத்தை லௌகிக சாதனங்கள்தான் வளர்த்துவந்திருக்கின்றன; லௌகிக சம்பந்தப்பட்ட அறிவு, மனம்,உணர்ச்சிஇவைகள் தாம் உலகத்தை உருவாக்கி வந்திருக்கின்றன. ஆத்மார்த்தம் அறிவைத் தேக்கி பிற்போக்குத் தன்மைக்கு இழுத்துச் சென்று மனிதனின் நேரம், நினைப்பு, உழைப்பு, அறிவு, ஆற்றல் இவைகளைத் தடுத்து வந்திருக்கின்றதேயொழிய, இவ்வுலக வாழ்வுக்கு எந்த நன்மையையும்புரிந்ததில்லை, புரியத் தெரியாது.

உள்ளபடியே இன்றைய உலகில் எந்தெந்த நாடுகள் ஆத்மார்த்தத்தைக் குறைத்து, லௌகிகத்தை வளர்த்துக் கொண்டிருக்கின்றனவோ, அந்தந்த நாடுகள் தாம் மக்களின் தேவைகளை நிறை வேற்றுவனவாக அமைந்திருக்கின்றன. ரஷ்யா உள்ளிட்ட மேலை நாடுகள் மக்களின் தேவையை நிறைவேற்றி வருகின்றன, லௌகிகத்தை நம்பி வாழ்வதால்! இந்தியா போன்ற கீழை நாடுகளில் மக்களின் தேவைகளைச்சரிவரப்பூர்த்திசெய்யமுடியவில்லை, ஆத்மார்த்தத்தை இன்னமும் நம்பி வாழ்வதால்!

லௌகிக சாதனத்தை விரும்பி இருகை யேந்திச் சென்ற இடத்தில், ஆத்மார்த்த போதனை புரிகிறார் பண்டிதர், பரம்பரைப் பழக்கத்தை யொட்டி! **நேரு நாட்டின் ஆத்மார்த்த போதனை அங்கு பலிக்குமா?**

வருந்துகிறோம்!

விழுப்புரத்தில திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டத்திற்கு 144 தடையுத்தரவு போடுவதற்கு முயற்சி செய்தவராகத் தோழர் டாக்டர் தியாகராசன் அவர்கள் பெயர் 19-10-49 சென்னை, 20-10-49 வெளியூர் "மாலைமணி"யில் குறிப்பிடப்பட்டிருந்தது. தோழர் டாக்டர் தியாகராசன் அவர்களுக்கும், அப்படிப்பட்ட முயற்சிக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என்று, அவர் மூலமாக இப்பொழுது அறியப்படுவதால், அவருடைய பெயர் தவறுதலாகக் குறிப்பிடப்பட்டதற்கு மிகவும் வருந்துகிறோம்

தோழர் டாக்டர் தியாகராசன் அவர்கள் நமக்கு எழுதியுள்ள கடிதத்தில், பெரியாரின் ஆதரவாளராகத்தாம் இருக்க என்றும் விரும்பியதில்லை என்றும், பெரியார் தம்முடைய வீட்டிற்கு வந்து சென்ற காரணத்தாலேயே தாம் பெரியாரை ஆதரித்துவிட்டதாக விழுப்புரத்திலே உள்ள சிலர் தவறான கருத்தினை கொண்டுவிட்டார்கள், என்றும் எமக்கு அப்படிப்பட்ட கருத்து இருந்ததில்லை என்றும், 144 தடையுத்தரவு முயற்சிக்கு வேறு யார் காரணமோ தாம் அறியக் கூடவில்லை என்றும், தமக்கும் அம்முயற்சிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் கிளையினை விழுப்புரத்தில் அமைக்கவே தாம் விரும்பிக் கொண்டிருப்பதாகவும், அதற்கு அண்ணாதுரையை அழைத்துத் துவக்க விழாவை நடத்த பெரிதும் எண்ணிக்கொண்டிருப்பதாகவும் தெளிவாக விளக்கிக் காட்டி, மனம் நொந்த நிலையில் எழுதியுள்ளார்கள்.

நிருபரின் தவறான செய்தியின் மூலம் தோழர் தியாகராசன் அவர்கள் மனம்புண்பட நேர்ந்ததற்கு வருந்துகிறோம்

ஆசிரியர்

நன்றி அறிதல்

—(0)—

16ந் தேதி முதல் ஒரு கிழமையாக, தமிழ் நாடெங்கும், திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாக் கூட்டங்களைச் சிறப்புற நடத்திக் கொடுத்த தோழர்களுக்கெல்லாம், என் உளமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்

பொச்சரிப்புப் புயலும், பகை உணர்ச்சியும் கொண்டவர்கள், இந்தத் துவக்கவிழாக் கூட்டங்கள் செம்மையாக நடைபெறாது என்றும், இப்பக்கத்தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்துக்கு ஆதரவு காட்டமாட்டார்கள் என்றும், கூறிவந்ததுடன், உண்மையாகவே, நாட்டிலே நமது முயற்சிக்கு ஆதரவு கிடைக்காது என்று நம்பியும் வந்தனர்.

துவக்கவிழாக் கூட்டச்சிறப்பு, அவர்களின் 'ஆருடத்தை' அபத்தமாக்கியதுடன், நமது நம்பிக்கையைப் பலப்படுத்தி இருக்கிறது.

இந்த ஆர்வத்தைத் துணைகொண்டு, ஆங்காங்குள்ள தோழர்கள் திராவிட முன்னேற்றக் கழகக்கிளைகளைத் தழைக்கச் செய்ய வேண்டுகிறேன்.

இதுவரையில், ஏறத்தாழ 250 கிளைக்கழகங்கள் தழைத்திருக்கின்றன. இவைகளை அமைத்த ஆர்வமிக்க தோழர்களுக்கும், துவக்கவிழா கிழமையைச் சிறப்புறவும், வெற்றிகரமாகவும் நடத்தித்தந்தவர்களுக்கும் என் நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உள்ளத்தில் பகை உணர்ச்சியோ, கேவலமான நினைப்போ கொண்டவர்களல்ல, திராவிட முன்னேற்றக் கழகத்தினர்; அவர்களின் போக்கு கண்ணியமானது, பேச்சு நேர்மையானது, விளக்கம் தெளிவுதருவது, ஆர்வம், குன்றாதது என்பது நன்கு விளங்கும் வகையிலே, துவக்க விழாக்கூட்டங்களிலே கலந்து கொண்ட தோழர்கள் சொற்பொழிவாற்றியுள்ளனர். அந்தப் போக்கை நான் பெரிதும் பாராட்டுகிறேன்—என் நன்றி அவர்கட்கு உரித்தாகுக. இனிது துவக்கப்பட்ட நமது முயற்சியை, மேலும் தொடர்ந்து நடத்திச் சென்று, நீதிக்கும் நேர்மைக்கும், நயவஞ்சகம் நெளியும் இந்த நாட்களிலேயும், வெற்றி உண்டு, உண்மைக்கு ஊறு நேரிடாது, உழைப்பு வீண்போகாது என்பதை, செயல் மூலம் நிலை நாட்டிக்காட்ட வேண்டுகிறேன். முன்னேறிச் செல்க! வெற்றி காண்க!!

அண்ணாதுரை.

பொதுச் செயலாளர்,

தி. மு. கழகம்—தலைமை நிலையம்

24—10—49

முத்தமிழ் மாநாடு

சென்னையில், டிசம்பர் திங்கள், முதல் வாரத்தில் திராவிட முன்னேற்றக்கழகத்தினரால், முத்தமிழ் மாநாடு நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுவருகிறது. விபரம் விரைவில்.

பொறுப்பாளர்,

தி. மு. தலைமைக் கழக அலுவலகம்.

சென்னை.

கோவையில் "துளிவிஷம்"

கோவை, அக். 17—

நேற்று இரவு கோவை எடிசன தியேட்டரில் கே. ஆர். ராமசாமியின் கிருஷ்ணன நாடக சபையார், டைரக்டர் தோழர் ஏ. எஸ். ஏ. சாமி தீட்டிய 'துளி விஷம்'' என்னும் நாடகத்தைத் தோழர் சி. என். அண்ணாத்துரை தலைமையில் நடத்திக் காட்டினர். நாடகம் இரவு 10-மணிக்கு ஆரம்பமாயிற்று. நாடகத்தின் இறுதியில் தோழர் சி. என். அண்ணாத்துரை நடிகர்களையும், டைரக்டர் சாமியையும் பெரிதும் பாராட்டிப் பேசினார். கலைமூலம்சீர்திருத்தப்பணி புரிவதைப் போற்றி மேலும் மேலும் தொடர்ந்து இப்படிப்பட்ட ஆக்கவேலையைச் செய்ய மக்கள் பெரிதும் ஆதரவுதர வேண்டும் என்றும் பேசினார்.

பின்னர், தோழர் அண்ணாத்துரை நாடக சபையினரின் சார்பாக, இந்த நாடகத்தில் நடித்த ஜுபிடர் நடிக நடிகையான எஸ். ஏ. நடராஜன், எம். ஜி. தண்டபாணி, முஸ்தபா, எஸ். டி. சுப்பையா, கே. கே. பாரவதி பாய், பி. கே. சரஸ்வதி முதலியோர்க்குப் பரிசுகள்வழங்கினார்.

டைரக்டர் சாமியும், கே. ஆர். ராமசாமியும் ஜுபிடர் முதலாளிகட்கும், தலைமை வகித்தவருக்கும், ஏனையோர்க்கும் நன்றி தெரிவித்தனர். நாடகம் இரவு 2-மணிக்கு இனிது முடிந்தது. (ந-நி)

அறிக்கை

ஏஜெண்டு தோழர்கள் பட்டியல் தொகையை பாங்டிராபட் அல்லது மணியார்டர் மூலம் அனுப்பவேண்டுகிறோம்.

—மானேஜர்.

கோதாவரி முதல் தாமிரவருணி வரை

தென்னாட்டை ஆற்றுப்பாதையால் இணைக்க வழி

கங்கையிலிருந்து காவிரிவரை, ஒரு கால்வாய் வெட்டி, அதைப் படகு போக்குவரத்துக்குரியதாகவும், நீர்ப்பாசன வசதி அளிப்பதாகவும் ஆக்கிவைக்க வேண்டுமென்று, காலஞ்சென்ற சீனிவாசய்யங்கார் ஒரு திட்டம் போட்டிருந்தார். ஆனால் அதனை நிறைவேற்றிவைக்க அப்போது முடியாமற்போனது.

இப்போது, தென்னாட்டைப் பொருத்தமட்டிலாவது, கோதாவரி முதல் தாமிரவருணி ஆறுவரை ஒரு கால்வாய் வெட்டி, நீர்ப்பாசனம், குடி தண்ணீர், மின்சாரச் சக்திப் பெருக்கம், போக்குவரத்து முதலியவற்றுக்கெல்லாம் அதனைப் பயன்படுத்திக்கொள்ளலாம் என்று சர். சி. பி. இராமசாமி (ஐயர்) கூறுகிறார்.

இத்தகையதொரு கால்வாய் வெட்ட, முன்னிருந்த தடைகளாகிய ஜமீன்தாரிப் பிரதேசத் தொல்லைகள், சிறு சமஸ்தானத் தொல்லைகள் முதலியவை இப்போதில்லையாகையால், கோதாவிரியிலிருந்து ஒரு நீண்ட கால்வாயை வெட்டிவந்து இடையிலுள்ள கூவம் உட்பட எல்லா ஆறுகளுடனும் அதை இணைத்துத் தாமிரவருணி ஆற்றில் இணைத்துவிடுவதன் மூலம், உழவுக்குமட்டுமின்றிப் பல துறைகளிலும் பயன்படக்கூடிய பல ஆக்க வேலைகளைச் செய்தல் கூடுமென்று கருதுகிறார் தோழர் சா. சி. பி.

இவருடைய இந்த யோசனை நல்லதுதான், நடைமுறையில் வந்தால். ஆனால் எதற்கெடுத்தாலும் பணமில்லை என்ற பாட்டைப்பாடும் சென்னை அரசாங்கமோ, சென்னை அரசாங்கம் கேட்கும் உதவிகளை மறுத்து வரும் மத்திய அரசாங்கமோ இவ்வளவு பெரிய திட்டத்தை அங்கீகரித்து வேலைசெய்ய முன் வருவது எங்ஙனம் சாத்தியமாகும்?

ஆனால், இதற்கு வேண்டிய பணத்தை அரசாங்கம் பொது மக்களிடம் கடனாகப்பெற்றுக் கொள்ளலாமென்றும், இத்தகைய நல்ல திட்டங்களுக்குப் பொதுமக்கள் தாராளமாகப் பண உதவிசெய்ய முன்வருவார்களென்றும் சர். சி. பி. கருதுகிறார்.

இத்தகைய திட்டங்கள் நிறைவேறினால், நாடு பயனடையும் என்பதில் ஐயமில்லை. ஆனால், இத்தகைய பெரிய வேலைத் திட்டங்களை ஏற்றுக்கொண்டுசெய்ய அரசாங்கம் முன்வரவேண்டுமே! காவிரியில மற்றோர் அணைகட்டுவது, காட்டு நிலங்களில் பெருவாரியானவற்றை இயந்திரக் கலப்பைகள் கொண்டு உழுது, நெல், பருத்தி, சணல், நவதானியங்கள், கரும்பு முதலியவைகளையெல்லாம் நம் மாநிலத் தேவைக்கு மேற்பட்டு விளையக் கூடிய அளவுக்கு வேலைசெய்வது சர். சி. பி. யின் யோசனைப்படி நீண்ட ஆற்றுக்கால் வெட்டுவது போன்ற சிறந்த வேலைத்திட்டங்களை நிறைவேற்றிவைக்கவேண்டும், என்ற பொறுப்பும், அக்கறையும், ஆர்வமும் அரசாங்கத்திற்கு ஏற்படவேண்டுமே!

திருவள்ளுவர் கழகம்

அணைக்கரை, அக். 19—

தஞ்சை மாவட்டம், அணைக்கரை திராவிடர் கழகச்செயற்குழுக் கூட்டம், தோழர் பஞ்சு அவர்கள் கடையில் 18-10-49ல் நடைபெற்றது. அதுபோது திராவிட நாட்டு முன்னேற்றத்திற்கும், மூட நம்பிக்கையை ஒழிப்பதற்கும், பகுத்தறிவுப் பிரசாரம் செய்து தொண்டாற்றி வரும் பெரியார் ஈ. வே. ரா அவர்கட்கும், தளபதி அண்ணாத்துரை அவர்கட்கும், மற்றுமுள்ளத் தலைவர்கள், தொண்டர்களனைவர்க்கும் இக்கழகம் நன்றி செலுத்திக்கொள்வதோடு, டை திராவிடர் கழகத்தை, திருவள்ளுவர் கழகமென மாற்றித், திருவள்ளுவரின் கொள்கைகளை மக்கள் உணரும்படி குறள் பிரசாரம் செய்வதென முடிவு செய்யப்பட்டது. இன்னும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டுக் கூட்டம் முடிவுற்றது. எனச்செயலாளர் தோழர் ஆ. தங்கராசு எழுதுகிறார்.

அடக்குமுறைப்பசி அடங்கவில்லை!

மூர்த்தி அச்சகத்திற்கு ரூ. 3000 ஜாமீன்

திராவிட மக்களைக் கடுஞ்சொற்கள் பெய்து இழித்துரைத்து வெளியிட்ட "கருஞ்சட்டை ஒழிக" என்னும் பெயருடைய நூல் ஒன்றுக்கு மறுப்பாக எழுந்த "கருஞ்சட்டை ஒழியவேண்டுமோ?" என்ற சிறிய பிரசுரத்தைத் தடை செய்திருக்கும் அரசாங்கம், அச்சிறு பிரசுரத்தை வெளியிட்டதற்காக மறு மலர்ச்சி நூல் நிலையத்தின் மூர்த்தி அச்சகத்தாரிடம் ரூ. 3000 ஜாமீன் கேட்டிருக்கின்றது. அடக்குமுறைப் பசி இன்னும் அடங்கவில்லை போலும்!

தூத்துக்குடியில் நாடகம்

நவம்பர் 26, 27 - தேதிகளில்

தோழர் அண்ணாத்துரையும் அவர் குழுவினரும் நடிக்கும், **சந்திரமோகன் — நீதிதேவன் மயக்கம்** எனும் இரு நாடகங்களும், தூத்துக்குடியில், 26. 27 சனி, **ஞாயிறு** ஆகிய நாட்களில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது. திராவிட முன்னேற்றக் கழக வளர்ச்சிக்கான நிதி திரட்டுவதற்கு, மேற்படி நாடகங்கள் நடத்தப்பட இருப்பதால், திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இதற்கான ஆதாவு திரட்டும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். இது சம்பந்தமாக தூத்துக்குடி தோழர் கே. வி. கே. சாமி சென்னை வந்து, தோழர் அண்ணாத்துரையுடன், கலந்து பேசிவிட்டுச் சென்றிருக்கிறார்.

நீதிமன்றத்தில் திருமண ஆராய்ச்சி

ஆரிய மண முறைகள் எட்டில் அசுரவகை பற்றிய கருத்து வேற்றுமை

சட்டத்தில் சமயச் சார்பு ஏன்?

கேலு என்னும் பெயருடைய ஈழவப்பெண் 1936-ல் உயிர் நீத்தாள். இவளுக்குக் குழந்தைகள் இல்லை. எனவே, இவளுடைய சொத்துக்களை இவள் கணவன் சாத்து என்பான் பயன் படுத்திக்கொண்டான். ஆனால், கேலுவின் உடன் பிறந்தான் ஒருவன் அச்சொத்துக்கள் தனக்கே சேர வேண்டுமென்றும், கேலுவுக்கும் சாத்துவுக்கும் நடந்த திருமணம் அசுர மணமுறையாகுமாதலின், தானே தன் சகோதரியின் சொத்துக்குரியவன் என்றும் வழக்குத்தொடுத்தான். இதில் அத்திருமணம் அசுர மணமுறையா அல்லவா என்பது பற்றி நீதி வழங்க முனைந்தவர்கள் ஆராய்ந்தனர். மாவட்டநீதிபதி அசுர மணமென்று கருதினர். நீதிபதி பதஞ்சலி சாஸ்திரியார், அசுரமணம் அல்லவெனக் கருத்துக் கொண்டார்.

ஒருவன் ஒருத்தியை மணந்தால், அது திருமணமேயாகுமென்றும், திருமணம் என்பது ஒருவனையும் ஒருத்தியையும், மனைவியும் கணவனுமாக வாழச்செய்யும் சடங்கே என்னும் ஒரே திட்டம் நாட்டில் ஏற்படுவதை விட்டு, திருமணங்களில் கூட ஆரிய மணமுறை எட்டினை அனுசரிப்பதும், அதற்கு நீதிமன்றத்தில், நடைபெற்ற திருமணம் எம்முறையிலானது என்பதை ஆராய முற்படுவதும், சட்டங்களிலும் சமயச்சார்பு இருக்க இடமளிப்பதும் 'இந்துலா' என்ற பெயரைச் சட்டத்திற்கு வழங்கி, அதில் மக்களை உயர்வு தாழ்வுபடுத்தற்குரிய வரையில் சில சட்டங்களை வைத்துக்கொண்டிருப்பதும் நாட்டின் இக்கால முன்னேற்றத்துக்கு உரியதாக இருக்குமா? எனவே,சட்ட நிபுணர்கள் அடங்கிய கமிட்டி ஒன்று "இந்துலா" என்னும் பெயரை மாற்றி, அதற்கேற்ப, மக்கள் அனைவரையும் குலம், சாதி, இனம், நிறம் என்ற வேறுபாடுகள் எதனையும் கருதாமல், மக்கள் அனைவருக்கும் ஒரே படித்தாயுள்ளவாறு சட்டங்களைத்திருத்தியமைக்க அரசாங்கம் முன்வர வேண்டும். திருமணம் என்பது எந்த மணமுறையாகவும் இல்லாமல் ஒரேவகையினதாக அமைய வேண்டும். மற்றும் பல இதுபோன்றவை பற்றிய சட்டங்களும், சொத்துரிமை பெறுதலும், பிறவும் தெளிவான முறையில இருத்தல் வேண்டும். இதற்காவன செய்ய அரசாங்கம் முன்வரவேண்டும்.

துவக்க விழாப் பொதுக் கூட்டங்கள்

விருதுநகர்

விருதுநகர், அக். 17—

16—10—49 ஞாயிறு மாலை 7 மணிக்கு நகர் அஞ்சல் நிலையத்திடலில், நகராட்சி மன்றத்துணைத் தலைவர், தோழியர் உ. இராசம்மாள் அவர்கள் தலைமையில மிகச்சிறப்பாக நடைபெற்றது. ஏராளமான மக்கள் குழுமி இருந்தனர். தோழர் ந. இராமசாமி முன் மொழிய, மற்றொரு தோழா வழி மொழிய அம்மையார் தலைமை ஏற்று, இந்த நாள், திராவிடா வரலாற்றிலேயே பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டிய பொன்னாள் என்று குறிப்பிட்டு பேசினார்கள். தோழர் எஸ். உத்தண்டன் அவர்கள் பேசுகையில், திராவிடர் என்ற இனவுணர்ச்சி தோன்றக் காரணமாயிருந்த, டாக்டர் நாயர், தியாகராயர் காலம், இந்தி எதிர்ப்புப் போர்க்காலம், பெரியார் தலைவராக அமைந்த காலம் ஆகிய வறறை வரலாற்று முறையில் எடுத்துக்காட்டி, வருங்கால வாழ்வுக்குத் தி. மு. கழகத்தின் இன்றியமையாமையையும் விளக்கினர்.

அடுத்துப்பேசிய தோழர் ஆ. வ. ப. ஆசைத்தம்பி அவர்கள், பிற வியக்கங்களிலே குற்றங்கண்டபோதெல்லாம் கண்டித்து வந்த நாம் அத்தகைய ஊழல், குற்றம்—நமதியக்கத்திலேயே நடைபெறக் கண்டபோது, கண்டிக்காவிலிருந்தால் நாம் குற்றவாளிகள் ஆவோம என்றும், ஒரு ஆசிரியரிடத்திலே படித்த பிள்ளைகளில் யாருமே பரிட்சையில் தேறவில்லையெனில், அது ஆசிரியரின் குறையேயன்றி, மாணவரின் குறையாகாததைப் போலத்தான், திராவிடர் கழகத்திலே நேற்றுவரை—போற்றிப்புகழப்பட்டு வந்த தோழர்கள் அததனைபேரும், இன்று யோக்கியதையற்றவர்கள், அயோக்கியர்கள் என்று கூறப்படுவார்களானால், அது அத்தலைவரின் தன்மையத்தான் பிரதிபலிப்பதாகுமேயன்றி வேறில்லை என்றும், மு. கழகத்தின் இலட்சியங்களை விளக்கியும் சொற்பொழிவாற்றினர்.

இறுதியாகப் பேசிய தோழா என். வி. நடராசன் அவர்கள், இன்று நடைபெறும கூட்டங்களை குறித்துக் கேள்விப்படும் பெரியாா அவர்கள்; இந்நேரம இதை எண்ணி எண்ணி வேதனைப்படக்கூடுமஎன்றும், தொண்டர்கள் தமக்குள பொறுமையும் பூசலும் கொண்டு பிரிந்துவிடுவார்கள் என்று எதிர்பார்த்த அவருக்கு ஏமாற்றம் ஏற்படுவது இயலபென்றும, எனினும் திராவிடர்களின் பொது எதிரிகள், நமக்குள் ஏற்பட்டுள்ள பிளவு, பகையாக வளர்ந்து கொள்கையை விட்டு—ஒருவரை ஒருவர் அழித்துக்கொள்ள முற்படுவோம் என எதிர்பார்த்தால், நிச்சயம ஏமாற்றமடைவார்களென்றும், காங்கிரசின் ஆட்சியின் அடக்கு முறைகளையும் கொடுமைகளையும கண்டித்து விரிவாகப் பேசியபின், இரவு 10 மணிக்கு—நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. வாழ்த்தொலி முழங்கிறது.

குறிஞ்சிப்பாடி

குறிஞ்சிப்பாடி, அக். 18—

16-10-49 ஞாயிறன்று இவ்வூர் திராவிட முன்னேற்றக்கழக துவக்க விழா சிறப்புறக் கொண்டாடப்பெற்றது. மாலை 5-மணிக்கு கழகக் கட்டிடத்தில தோழா அ. ப. வைத்திலிங்கம் அவர்களால் கொடியேற்றுவிக்கப்பட்டது. பின் ஊர்வலம் மேளவாத்தியங்களுடன் புறப்பட்டு இடையில் தோழர் பா சக்கரபாணி அவர்கள் இல்லத்தில் தோழர் காஞ்சிமணிமொழியார் அவர்களால் கொடியேற்றுவிக்கப்பட்டு ஊர்வலம் பொதுக்கூட்டம் நடக்குமிடத்திற்கு வந்து முடிவடைந்தது. உடனே இவ்வூர் பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் ப. முத்தையா அவர்கள் தலைமையில் கூட்டம் துவங்கப்பெற்று. நாட்டுப் பண்பாடிய பிறகு, தோழர் அ. ப. வைத்திலிங்கம் அவர்கள் கொடியேற்று விழா சொற்பொழிவாற்றினர். தோழர்கள் க. நாராயணசாமி, காஞ்சி மணிமொழியார், (ஆசிரியர் "போர்வாள்")இரா. இளம்வழுதி முதலியவர்கள் திராவிட முன்னேற்றக்கழகம் தோற்றுவிக்க நேர்ந்த காரணத்தையும், கொள்கையையும் விளக்கி விரிவாக சொற்பொழிவாற்றினர்கள். இரவு9-30 மணிக்கு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

(வி.உ.)

பட்டுக்கோட்டை

பட்டுக்கோட்டை, ஆக. 9—

18-10-49 மாலை 5-30 மணிக்குப் பட்டுக்கோட்டை திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழாப்பொதுக்கூட்டம் காசாங்குளம் வடகரையில் செங்கபடுத்தான் காடு. தோழர்-பி. ரெங்கசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் என். வி. நடராஜன், [illegible] எஸ். இளங்கோ, ஏ வி.பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழி வாற்றினர்கள். (வி-உ.)

இராமனதபுரம் (முகவை)

இராமநாதபுரம், அக் 18—

நேற்று மாலை 7 மணிக்கு, அரண்மனைக்கு முன் பாக முகவை தி. மு. கழகச் செயலாளர்தோழர் வீரமணி தலைமையின் கீழ் தோழியர் ஆ. இராமாமிர்தத்தம்மையார் முன்னேற்றக் கழகத்தின் பணியைப் பற்றியும், மக்கள் மூட நம்பிக்கையால் பொருளாதாரச் சீர்கேடு அடைவதைப் பற்றியும் சுமார் 1-30 மணி நேரம் பேசினார்கள். சுமார் 2 000 மக்கள் கூடியிருந்தனர். தோழர் அ. பால்சாமிநன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

(செ-ர்)

திருப்பூர்

திருப்பூர், அக். 18—

இவ்வூர் நகா திராவிட முன்னேற்ற இளைஞர் கழகத் துவக்கவிழா,16—10—49 மாலை 7 மணிக்குத் தோழர் ஏ. பி. சாமி தலைமையில் நடைபெற்றது. தோழர் டி. யு. பி. அப்பன் திராவிட நாட்டுப் பண்பாடினார். பின்பு தோழர்கள் முத்துராஜ், ராமசாமி, எம். என். அண்ணு, கே. வி. சாமி, என். பால்ராஜ், டி. நடராஜன், ஏ. அரசன், கே. எஸ். மணி ஆகியோர் பேசினா. பின்பு செயலாளர் நன்றி கூறக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

ராவிட முன்னேற்றக் கழகங்கள்

த்தலக் குண்டு-சிற்றூர்க்கிளை

வத்தலக்குண்டு, அக். 16—

"திராவிட முன்னேற்றக்கழகம்-த்தலக்குண்டு சிற்றூர்க்கிளை" —10—49ல் நிறுவப்பட்டுக் கீழ்க்ண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—ப. இராமசாமி, துணைச் செயலாளர்—ப. ராஜ், பொருள்உறுப்பினர்:— துரைசாமி; விளம்பரஉறுப்பினர்:-பா.இபுராகிம் ஏனைய செயற்குழுவினர்—பி. அரசு எஸ். எஸ். பொன்னுசாமி, எஸ். பி. ஆசீர்வாதம், பரமசிவம், தங்கசாமி, கி. ராமன், பெருமாள், வெற்றி அன்பன், குழந்தைவேல், இளமதி, செங்குட்டுவன், சென்றுயன். டி. துரைராஜ். எனத் தோழர் பா. இபுராகிம் வி. உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

தூத்துக்குடி கிருஷ்ணராஜபுரம்—நகர உட்கிளை

தூத்துக்குடி, அக். 17—

இச்சவையைச் சார்ந்த கிருஷ்ண ராஜபுரத்தில்16-10-49-ல் தி.மு.க. உறுப்பினர்கள் தோழர் எம். லாசர் தலைமையில்கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—தூத்துக்குடி நகர கிருஷ்ணராஜபுரம் உட்கிளை" அமைத்தனர். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு ஓர் புதிய செயற்குழுத்தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- வேதநாயகம்; துணைச்செயலாளர்- ஞா. அந்தோணிமுத்து; பொருள் உறுப்பினர்- தொம்மைமிக்கேல்; விளம்பர உறுப்பினர்- எம். லாசர். மற்றும் ஒன்பது செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு தோழர் எஸ். கே. குழந்தைவேல் அவர்கள், தி. மு. க. கொடியை ஏற்றுவித்து சுமார் அரைமணி நேரம் பேசினார். பிறகு கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் அறிவிக்கிறார்.

* * *

சுல்தான்பேட்டை-சிற்றூர்க்கிளை

சுல்தான்பேட்டை, அக். 17—

பல்லடம் தாலுகா, சுல்தான் பேட்டையில்; தோழர் எஸ். கே. வெங்குபெதி அவர்கள் இல்லத்தில், 13-10-49அன்றுதோழர் வெங்குடசாமி அவர்கள் தலைமையில்-தி. மு. க. அமைப்புக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது பல்லடம் தோழர் பி. எம். பொன்னுசாமி அவர்கள் கழக இலட்சியங்கள் பற்றிப் பேசினார். பிறகு "திராவிட முன்னேற்றக் கழகம்—சுல்தான் பேட்டை சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:- எஸ். கே. வெங்குடபதி; துணைச் செயலாளர்:-கே. ரங்கசாமி; நிதிஉறுப்பினர்:- எஸ். ஆர். நாராயணசாமி; விளம்பர உறுப்பினர்கள்:- கே. ஆர். கோவிந்தராஜன், பி. எம். குருசாமி. பின்பு நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. எனத் தோழர் பி. எம். பொன்னுசாமி (ப. தி. மு. க. செயலாளர்) தீட்டுகிறார்.

* * *

ஓரக்காட்பேட்டை—சிற்றூர்க்கிளை

ஓரக்காட்பேட்டை, அக். 18—

இவ்வூர் திராவிடர் கழகத்தினர் கழகத் துணைத் தலைவர், தோழர் சோ.சி.அண்ணாமலை அவர்கள் தலைமையில் 17-10-49 அன்று இவ்வூர் திருவள்ளுவர் இரவு பாடசாலையில் கூடினர். அதுபோது உறுப்பினர்களின் ஒருமித்தக் கருத்துடன் திராவிடர் கழகம்-"திராவிட முன்னேற்றக் கழகம் ஓரக்காட்பேட்டை சிற்றூர்க்கிளை" என மாற்றப்பட்டது. பிறகு, கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:— சோ. கா. அந்தரசன்; துணைச் செயலாளர்:- கு. மு. இளங்கோ; பொருள்உறுப்பினர்:- கோ. ஆ. கணபதி. ஏனைய செயற்குழுவினர்:—த. வேணு, க. நடராசன், மு. சம்பந்தன், வே. திருநாவுக்கரசு, ரா. சம்பந்தன், அ. வெங்கடேசன், கு. காளத்தி, பா. கண்ணன், சோ. சி. அண்ணாமலை, வை. போ. முத்து, த. நடராசன். எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

செங்குன்றம்— சிற்றூர்க் கிளை

செங்குன்றம், அக். 16—

செங்குன்றம் (ரெட்ஹில்ஸ்) திராவிடர் கழகச் செயற்குழுக் கூட்டம் 9-10 49-ல் கூடியது. அதுபோது இவ்வூர் திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்— செங்குன்றம் சிற்றூர்க் கிளை" என மாற்றப்பட்டு, ஓர் புதிய செயற்குழு தேர்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- ஆர். கோவிந்தராசன்; துணைச்செயலாளர்- வடகரை பாலசுந்தரம்; பொருள் உறுப்பினர்- ஜான்வெஸ்லி; விளம்பர உறுப்பினர்- வி. என். நல்லசிவம். ஏனைய செயற்குழுவினர் — ப. சுந்தரமூர்த்தி, சி. கிருஷ்ணமூர்த்தி, மன்னூர், ப. பாலன், சி. துரைசாமி, சையத் உசேன்; ஆ. குப்புசாமி. பிறகு"திராவிடன்"வார இதழுக்கு நிதியளிப்பதென முடிவு செய்யப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

இராசாமடம்—சிற்றூர்க்கிளை

இராசாமடம், அக். 15—

14-10-49 அன்று தோழர் கே. ஒ. சி. கோபால்சாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில், செல்வம் திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்—இராசாமடம் சிற்றூர்க்கிளை" என மாற்றி நிறுவப்பட்டுக், கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்கள்:-ஆர். அந்தோனிசாமி என். கோதண்டபாணி, ஆர். கே. கணேசன், நிதி உறுப்பினர்கள்—இந்திரசித்து, ஆர். வீரய்யன்; விளம்பர உறுப்பினர்கள் :—டி. சி. ஏ. மதியழகன், வி. கருப்பையன்; ஏனைய செயற்குழுவினர்—ஏ. சாவித்திரி, எஸ். பொமையன், எம. வைத்திலிங்கம், கோவிந்தராசு கே.ஒ. சி. கோபால், வி.நடராஜன், எல். பொன்னையன், எம. முருகையன், எஸ். விசுவநாதன் எஸ். ஓமய்யன், பி. ராமகிருட்டினன்,பி.ராமசாமி, ஆர். சின்னப்பா, ஆர். நாராயணன், எஸ். சிவகடாசசம், வி. கடோர்க்கசன், ஆர். எஸ். ஜி. அன்பானந்தன், ஆர். என். இரண்யன், பி. விசுவநாதன், தமிழ் வாணன், இரா. தங்கவேலு, எஸ். நாகராசு. மேலுமொரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. எனச செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

வந்தவாசி—நகரக் கிளை

வந்தவாசி, அக். 18—

இந்நகர் திராவிடர் கழக உறுப்பினர்களின் கூட்டம், 16-10-49-ல் தோழர் ஈ. தங்கவேலு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது வந்தவாசி நகர திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம—வந்தவாசி நகரக் கிளை" என மாற்றியமைக்கப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- ஈ. தங்கவேலு; துணைச் செயலாளரும், நிதி உறுப்பினரும்— வி, டி. அண்ணாமலை; விளம்பர உறுப்பினர்-எஸ். எம். ஏ. குதூஸ். ஏனைய செயலுறுப்பினர்கள்-சையத், ஷண்முகம், ஹாலீது, கே. எம். கே. தாவூது, தசரதன், ஜனார்த்தனம்.

பின்னர் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. எனத் துணைச்செயலாளர் எழுதுகிறார்.

* * *

சின்னசேலம்—நகரக் கிளை

சின்னசேலம், அக். 18—

இவ்வூர் திராவிடர் கழக உறுப்பினர்கள் கூட்டம் 16—10—49 அன்று தோழர் சி. வாசுதேவன் அவர்கள் தலைமையில், வள்ளலார் மிதிவண்டி நிலையத்தில் கூடியது. அதுபோது பெரும்பாலோரின் ஆதரவில் இவ்வூர் தி. கழகம், "திராவிட முன்னேற்றக் கழகம்—சின்னசேலம் நகரக் கிளை" என மாற்றி நிறுவப்பட்டது. பிறகு புதிய செயற்குழுவொன்றும் அமைக்கப்பட்டது.

செயலாளர்:- சி. வாசுதேவன்; துணைச் செயலாளர்-கே. சி. அப்பாராசு; பொருள் உறுப்பினர்— கே. வி. எச். எம்.இஸ்மாயில்; விளம்பர உறுப்பினர்- ஏ. அம்பாயிரம். ஏனைய செயற்குழுவினர்- கே. பி. முத்துசாமி, எஸ். வீராசாமி, இஸ்மாயில், எம். அப்துல் ரஹிமான், சி. கோவிந்தசாமி, ஏ. வி. ஆறுமுகம், பிச்சையப்பன், ஆர். தாண்டவன், லோ. அருணாசலம், மரியநாதன். எனச் செயலாளர் எழுதுகிறார்.

* * *

சென்னை சைதாப்பேட்டை—நகர உட்கிளை

சென்னை, அக். 18—

சென்னை, சைதாப்பேட்டை தி. மு. கழக அமைப்புக் கூட்டம் 16-10-49 அன்று மசூதித்தெரு, 9-வது எண்ணுள்ள கட்டடத்தில், தோழர் ஆ. வீரவாகு அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தலைவர் முகவுரையாக தி. மு. கழகத்தினரிடையே இருக்க வேண்டிய கட்டுப்பாடு, பணியாற்றும் உறுதி ஆகியவை பற்றிப் பேசினார். பிறகு, "திராவிட முன்னேற்றக் கழகம்—சென்னை நகர சைதாப்பேட்டை உட்கிளை" நிறுவப்பட்டு, ஓர் புதிய செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்- ஆ. வீரவாகு; துணைச் செயலாளர்- செ. பழனிவேலு; நிதி உறுப்பினர்- தி. கு. சுப்பிரமணியம்; விளம்பர உறுப்பினர்- பெ. அண்ணாமலை. மற்றுமுள்ள செயற்குழுவினர்:— எம. எல். செங்கல்வராயன், இரா. இலக்குமணன், செ. வி. ராமச்சந்திரன், இராமலிங்கம், வலஜிவன். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. என வி. உறுப்பினர் எழுதுகிறார்.

* * *

கணபதி சமுத்திரம்-சிற்றூர்க்கிளை

கணபதி சமுத்திரம், அக்.18-

கணபதிசமுத்திரம் (ஆறுமுகமங்கலம்) தி. மு. கழக அமைப்புக்கூட்டம், 15-10-49-ல் இவ்வூர் க. ம. லெ. மாந்தோட்டத்தில் நடைபெற்றது. அதுபோது, ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு, திராவிட முன்னேற்றக் கழகம்—கணபதிசமுத்திரம் சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. பிறகு, கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:—க. ம. சு. முத்து; பொருள்உறுப்பினர்:—கே. எம். அப்துல்ராசாக், விளம்பர உறுப்பினர்:—மா. பூலார்.

ஏனைய செயலுறுப்பினர்கள்:— ரா. நாராயணன், எஸ். பி. தங்கராஜ், பி. பிரமையா எனச்செயலாளர் தீட்டுகிறார்.

* * *

திருப்பத்தூர்—நகரக்கிளை

திருப்பத்தூர், அக். 18—

இவ்வூர் தி. மு. கழக அமைப்புக குழுக்கூட்டம் 17-10-49-ல் தோழர் டி. கே. கோவிந்தசாமி அவர்கள் மண்டியில், தோழர் எம். நடேசன் அவர்கள் முன்னிலையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம—திருப்பத்தூர் நகரக்கிளை" நிறுவப்பட்டுப் புதிய செயற்குழுவொன்றும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—சி. ஆர். ஏ. இளம்பிறை; துணைச்செயலாளர்:— எம். எஸ். பானு; பொருள் உறுப்பினர்:— ஆர். எஸ். மணி; விளம்பர உறுப்பினர்:—எஸ். அழகுமுத்து. ஏனைய செயற்குழுவினர்:—டி கே. சுப்பிரமணியம், டி. கே. கோவிந்தசாமி, கே. நெடுஞ்சோழன், எஸ். கிருஷ்ணன், ஏ. பி. முருகேசன், டி. கேசவன், டி. பி. தங்கவேலு, எம். இளம்வழுதி, டி. ஏ. மணிவாசகம், ஏ. டி. சுந்தரமூர்த்தி, ஏ. கஜபதிராஜ், டி. மதியழகன். எம். எல். சுப்புனு, பி. ஏ. பெரியசாமி, ஜி. ராமலிங்கம, டி. என். வேணு, பி. பொன்னுசாமி, இன்னும் ஐந்து உறுப்பினர்களைச் சேர்த்துக் கொள்ள செயலாளருக்கு உரிமையளிக்கப்பட்டு, நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிந்தது. எனச் செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

கடம்பூர்—சிற்றூர்க்கிளை

கடம்பூர்; அக்.18—

செல்லமாவட்டம், கடம்பூர் திராவிடர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் 16-10.49ல் கூடி. திராவிடர் கழகநிலை குறித்து விவாதித்தது. பிறகு பெரும்பாலோரின் தீர்மானப்படி திராவிடர் கழகம் கலைக்கப்பட்டு, "திராவிட முன்னேற்றக் கழகம்—கடம்பூர்-சிற்றூர்க்கிளை" நிறுவப்பட்டது. கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம். எஸ். பொன்னுசாமி, துணைச்செயலாளர்:—சி. ராமசாமி, பொருளஉறுப்பினர்:—ப. தில்லை, விளம்பரஉறுப்பினர்:—அ. ரத்தினசாமி.

ஏனைய செயற்குழுவினர்:— மா. க. செல்லையா, பெ. மு. பொன்னுசாமி, செ. முத்தையா, சு. தர்மா, ரா. முத்துமாலை, பி.வி வேலு, ஆ. தங்கவேல், மு. பேச்சியப்பன், சு. வே. மணி. க. முத்தையா. பிறகு, செயலாளர் நன்றிகூறக் கூட்டம் இனிது முடிந்தது. என விளம்பர உறுப்பினர் தீட்டுகிறார்.

* * *

அண்ணாமலைநகர்—நகரக் கிளை

அண்ணாமலை நகர், அக். 19—

சிதம்பரம, அண்ணாமலை நகர் திராவிடர் கழகத் தோழர்கள் 18-10-49-ல் தோழர் தில்லை வில்லாளன் தலைமையில் கூடி, தி. கழகத்திலிருந்து விலகி "திராவிட முன்னேற்றக்கழகம்—அண்ணாமலை நகர் நகரகிளை" நிறுவினர். பின்பு கீழ்க்கண்ட செயற்குழுவினர் தேர்ந்தெடுக்கப்பட்டனா.

செயலாளர்— என். முத்து; துணைச் செயலாளர் —வி. ராமமூர்த்தி; பொருள் உறுப்பினர்— எஸ். கோவிந்தசாமி; விளம்பர உறுப்பினர்— டி. நாராயணசாமி; ஏனைய செயலுறுப்பினர்கள்—என் சிவலிங்கம், டி. வி. நாதன், எஸ். சாமித்துரை, எம. கோவிந்தசாமி, டி. பழமலை. பிறகு தோழர் த. மா. திருநாவுக்கரசு அவர்கள் கழகக் கொள்கைகளை விவரித்துப் பேசினார். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, செயலாளர் நன்றிகூறக் கூட்டம் முடிவுற்றது. என விளம்பர உறுப்பினர் வரைகிறார்.

* * *

சென்னை 16-வது வட்டம்—நகர உட்கிளை

சென்னை, அக். 19—

சென்னை 16-வது வட்டத்திராவிட இயக்க ஆதரவாளர்களின் கூட்டம் 15—10—49ல், தோழர் மூ. தி. நரசிம்மன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது, "திராவிட முன்னேற்றக்கழகம்-சென்னை நகர 16—வது வட்டம் உட்கிளை" அமைக்கப்பட்டு, செயற்குழுவொன்றுந்தேர்ந்தெடுக்கப்பட்டது.;

செயலாளர்:—மூ. தி. நரசிம்மன் நிதி உறுப்பினர்:—பாண்டுரங்கன்; விளம்பர உறுப்பினர்:—சி. எஸ். திராவிடமணி. ஏனைய செயலுறுப்பினர்களுந்தேர்ந்தெடுக்கப்பட்டனர். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிந்தது. எனச்செயலாளர் எழுதுகிறார்.

வறுமைக்குப் பலி!

வேலையில்லாத் திண்டாட்டத்தின் விளைவு!

புறந்தை (பொரையார்), அக்.18—

மதுவிலக்கின் காரணமாக, வேலையிழந்து கஷ்டப்பட்ட திருநெல்வேலி மாவட்டத்தைச் சேர்ந்த மாரியப்ப (நாடார்) என்பவர், தனது இரு பிள்ளைகளையும் சாகச் செய்து தானும் தற்கொலைச் செய்துகொண்டார்.

தோழர் மாரியப்ப (நாடார்) இவ்வூருக்கு வந்து சர்க்கரையில் தின்பண்டங்கள் தயார் செய்து. அவற்றை விற்று அதன்மூலம் கிடைக்கும் சிறு ஊதியத்தைக் கொண்டு, தனது 9 வயதுடைய ஆண் பிள்ளையையும், 11 வயதுடைய பெண் பிள்ளையையும் வளர்த்து வந்தார். சர்க்கரைப் பஞ்சத்தின் காரணமாக தொழில் கெடவே, வறுமையால் வாடினார். வறுமையைப் போக்க வேறு வழியின்றி, மனமுடைந்து தனது மக்களையும் மாளச் செய்து, தானும் தற்கொலை செய்து கொண்டு மாண்டாரெனத் தெரிகிறது.

(ஓ-சி)

சென்னைத் தமிழாசிரியர் கழகம்

சென்னை, அக். 18—

சென்னைத் தமிழாசிரியர் கழக உறுப்பினர் கூட்டம் 16-10-49 ஞாயிறு பிற்பகல் 4-மணிக்குப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளியில், புலவர் மயிலை. சிவமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சென்னை மாவட்டத் தமிழ்ப் புலவர் பலரும் பிறமாவட்டத் தமிழ்ப் புலவர்கள் பலரும் வந்திருந்தனர். கீழ்க்கண்டவர்கள் புத்தாண்டுச் செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தலைவர்: புலவர், மயிலை. சிவமுத்து. துணைத் தலைவர்கள்: பண்டிதை கிருஷ்ணவேணி அம்மையார், புலவர், அ. மு. பரமசிவானந்தம் M.O.L M. Lit. புலவர் அன்பு கணபதி. செயலாளர்கள்: புலவர். R. வாசுதேவன், புலவர். S. விசுவநாதன் பொருளாளர்: புலவர். M R. மாணிக்கம சிறப்புறுப்பினர்கள் ஒன்பதின்மர்

தமிழாசிரியர்களின் ஆக்கம் குறித்து எல்லா மாவட்டங்களிலும் உள்ள தமிழாசிரியர் கழகங்களின் மூலம் 'தமிழாசிரியர் வாரம்' கொண்டாடுவதென முடிவு செய்யப்பட்டது விரைவில் சிறப்புறுப்பினர் கூட்டம் கூட்டிக் கொண்டாட வேண்டிய முறை, நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்கள் ஆகியவைகளை ஆலோசித்து விளக்கமான அறிக்கை ஒன்று வெளியிடுவதென் றும் முடிவு செய்யப்பட்டது.

தமிழாசிரியர்களின் நிலைமையை விளக்க, மற்றும் ஒரு முறைசென்று கல்வி அமைச்சரைக் காணவேண்டும் என்பது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது.

ஏஜெண்டுகள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களுக்கு 'மாலைமணி' விற்பனை செய்ய முன்பணம் கட்டக்கூடிய ஏஜெண்டுகள் தேவை.

(1) தேனி,
(2) தச்சநல்லூர்,
(3) கீவளூர்,
(4) கடலூர்,
(5) முசிறி,
(6) திருமலைராயன் பட்டணம்,
(7) செம்மனார்கோயில்,
(8) மங்கநல்லூர்,
(9) பாப்பாநாடு,
(10) நன்னிலம்,
(11) ஜோலார் பேட்டை,
(12) பரங்கிபேட்டை,

அடக்குமுறை ஆட்சி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

என்ற நன்றியறிதல் நம்மிடம் இருந்தது. இதனை உணர்ந்த காரணத்தால்தான், சில பல எதேச்சாதிகாரத்திற்கு, சர்வாதிகாரப் போக்கிற்குத் தலை சாய்வதிலே என்றும் களங்கமில்லை என்று பணிந்தோம்; சிற்சில சமயம் 'தன்மான மற்றவர்களாகக்கூட நடத்தப்பட்டோம்! ஆமைகளாய், ஊமைகளாய் இருந்து வந்தோம்! அந்த ஏற்பாடு, நிலைமை, அவர் காலம்வரைதான் என்று எண்ணியிருந்த நம்மை, அவர் காலம்வரைக்குமல்ல, அவருக்குப் பின்னும், அவர் திருமண மூலம், வாரிசாகும் அம்மையாரின் ஏவலராய், ஆமைகளாய், ஊமைகளாய் இருக்கும் நிலையை ஏற்படுத்துகிறேன், திருமண மூலம் என்றார். கழகத்தின் சக்தியை வளர்க்கத் தம் வாழ்வையே அர்ப்பணித்த தன்மானத் தோழர்களை, ஒரு மாதிடம் அடகு வைக்க ஒப்பினார்; ஏற்பாடு என்று கூறினார் திருமண மூலம்—இதனை எப்படி ஆதரிக்க முடியும்? எவர் ஆதரிப்பர்?

இதிலென்ன தவறு ?

வீட்டிலே ஒரு தகப்பன் இருக்கிறார். அவர் மூன்றாம் தாரமாக ஒரு மாதை மணக்க விரும்பி, ஏற்பாடுகள் எல்லாம் செய்கிறார். அதைக் கேட்டு அவருடைய முதல் மனைவியின் மூத்த மைந்தன் "அப்பா, இது என்ன, ஆபத்தான போக்கு. கேட்கவே நெஞ்சம் திடுக்கிடுகிறதே! உண்மைதானா! இப்படியும் செய்யலாமா! நான் என்ன குறைவைச் செய்தேன் உங்களுக்கு. உமது மருமகள்தான் என்ன உம்மை உதாசீனம் செய்தாளா? உமது பேரப்பிள்ளைகள், பெண்கள் உம்மிடம் சிரித்து விளையாடுகின்றனரே! இதைக் கண்டும் உமக்கு எப்படி மனம் துணிந்தது. மறுபடியும் ஒரு மனைவி மூன்றாந்தாரமாகக் கொள்ள! ஊரார் கேலி செய்கின்றனரே! ஒப்புகிறதா உமது உள்ளம் இதனை," என்று கேள்விகள் கேட்கிறான். அதற்கு அத்தகப்பன் "அப்பா மகனே, எனக்கு ஒரு குறையும் இல்லை. உன் மக்கள் என்னிடம் கொஞ்சும் போது, நானும் எனக்கு ஒரு குழந்தை பெற்றெடுத்துக் கொஞ்சவேண்டும்போல இருக்கிறது" என்று கூறுவாரானால் அவரை என்னென்பது! கொஞ்சம் ரோஷமுள்ள மகனானால், வீட்டு மூலையிலே ஒரு முழக் கயிற்றிலே தொங்குவான் பிணமாக! கோபம் கொண்ட மகனாக இருப்பின், வெளியே போய்விடுவான்! வம்பு பிடித்த மகனாயின், பாகம் பிரித்துக் கொடு என்பான்! அத்தகைய நிலைதான் இன்று நமக்கும். நான் இந்த மூன்று வகை மகனுமல்ல, கொஞ்சம் சாதுவானவன். எனவே, வேண்டினேன், வேதனைப்பட்டேன். சரிப்படவில்லை! உன் உறவே வேண்டாம் என்று வெளியே வந்தேன். இதிலென்ன தவறு? குற்றம்? இதில் என்ன சுயநலம் இருக்கிறது?

ஏற்பாட்டை ஏற்கவில்லை

இப்படிப்பட்ட பற்பல பிரச்சினைகள், ஒரு நாளல்ல, பல நாட்கள்; ஒரு வாரமல்ல, பல வாரங்கள்; ஒரு மாதமல்ல, மூன்று மாதங்களாகப் பத்திரிகைகளில் பெரிதும் நடமாடிக்கொண்டிருந்தன. என் போன்ற பலரும் கருத்துக் கொண்டிருந்தனர். இதனைக் கடித மூலமும் நேரிலும், பத்திரிகை வாயிலாகவும் கண்டறிந்து, நன்கு தீர ஆலோசிக்கும்போது, இந்த நிலை, ஆற்ற முடியாத புண், நீக்க முடியாத பாரம்; தாங்க முடியாத, சகிக்க முடியாத பழியும், இழிவும் என்று ஏற்பட்டுவிட்டது. இனி, திராவிடர் கழகத்தில், பெரியாரின் தலைமையின் கீழ் பணியாற்ற முடியாது என்ற நிலை ஏற்பட்டது. எனவே நாங்கள் நிலைமையின் காரணமாக, விலகி வேறு கழகம், அமைப்பு ஏற்படுத்திக் கொண்டோம். அந்தப் புதிய அமைப்பு, ஸ்தாபனந்தான், திராவிட முன்னேற்றக் கழகம். இது போட்டிக்காகவோ, பொறாமைக்காகவோ, பொச்சரிப்புக்காகவோ, பொல்லாங்குக்காகவோ ஏற்பட்டதல்ல. அவர் வாழ்நாளில் மட்டுமல்ல, பிறகும், அம்மையின் கரத்தில் பம்பரம் போல் சுழலும் நிலையை வெறுத்தோம்; ஏற்பாட்டை ஏற்கவில்லை, வெளியேறினோம். ராஜ்யத்திலே அரசன் காட்டாட்சி நடத்தினால் ராஜ்யத்தைவிட்டு வெளியேறி, காட்டிற்குச் சென்று, மக்கள் காட்டையே நல்லதொரு நாடாக்குவதைப் போல; ஒரு கிணறு இருக்கிறது, அதிலே இரு சாரார்க்குத் தகராறு. அப்போது ஒரு சாரார் கண்ணியமாக விலகி, விட்டுக்கொடுத்து, பக்கத்துத் தோட்டத்திலுள்ள பாழுங் கிணற்றையும் பதப்படுத்தி நீர் எடுத்தல் போல; பூந்தோட்டத்தில் உலவ முட்டுக்கட்டை என்றால் விட்டுத் தள்ளி, பொட்டல் காட்டையே பூந்தோட்டமாக்கிடும் தன்மையைப் போல; நாம் உருவாக்கிய, நம்முடைய வியர்வைத் துளிகளால் தழைக்கச் செய்த, ரத்தஞ்சிந்தி வளர்த்த—உள்ளத்தின் பிரதிபலிப்பான, உணர்ச்சியின் உருவான, நம்முடைய திராவிடர் கழகம், நம்மிடமிருந்து பறிக்கப்படுகிறது. உரிமை பறிபோகிறது. ஆமையராய், ஊமையராய் வாழ விரும்போம்—இதனை எதிர்க்கிறோம். மறுக்கிறோம். ஆனாலும் கண்ணியமாக விலகி வேறு கழகம் அமைத்துக்கொண்டோம். பெரியார் மீது துவேஷப் புயல் கிளப்பவோ, அல்லது அவரது கொள்கைகளைக் குறை கூறிடவோ, அவரது உழைப்பை உதாசீனம் செய்யவோ, அவருக்கு மாசு கற்பிக்கவோ, அல்ல இக்கழகம் என்று திட்டமாகக் கூறிவிடுகிறேன். அவருடன் போராடுவதல்ல நோக்கம். நான் சாமான்யன். ஒரு பத்து பதினைந்து ஆண்டுகள்தான் உழைத்தவன், பொது வாழ்வில். அவரோ 30 ஆண்டுகள் உழைத்தவர். அவர் நிலை வேறு. என் நிலை வேறு. அவரோடு பலப் பரீட்சை நடத்த முடியுமா என்றால்? முடியாது.

நாட்டின் நிலையை அறிய வேண்டும்

தெருவிலே பாதசாரி நடந்துபோகிறான், கால் கடுக்க. அப்போது மோட்டாரிலே செல்லும் ஒருவர் பாதசாரியைப் பார்த்து "அப்பனே என்னோடு போட்டியிட்டு என் காருக்கு முன்னால் உன்னால் வேகமாக நடக்க முடியுமா." என்று கேட்டால், பாதசாரி, மோட்டார் சவாரிக்காரரைப் பார்த்து என்ன நினைப்பான்? ஏன் கேட்கிறார். அவசியமற்ற கேள்வி. அது மட்டுமல்ல அர்த்தமற்ற கேள்வியுங்கூட. அது போலத்தான் என்னைப் பார்த்துப் பெரியாரோ, அல்லது அவரது ஆதரவாளரோ, என்னோடு போராட உன்னால் முடியுமா? என்று கேட்பது. இது அர்த்தமற்றது. அனாவசியமானது. அதோடு வீணாக வம்புக்கு வலிப்பதுங்கூட. நமக்கும் பெரியாருக்கும் ஏற்பட்டுள்ள மனத்தாங்கலையே மிகைப்படுத்தி, மேலும் மேலும் பேசக்கூடாது. மறந்தே விடவேண்டும். அதுவல்ல நமது கண்முன் நிற்க வேண்டியது. அதையல்ல நாம் மக்கள் முன்காட்டவேண்டியது. அது தேவையில்லை. இனி அவசியமில்லை.

நாட்டின் நிலையைக் கவனிக்கவேண்டும். நாட்டின் மக்கள் தேவையென்ன? அவர்கள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டை எது? என்று கண்டு களைந்தெறியவேண்டும்.

நமநாட்டின் நானாவித நிகழ்ச்சிகளைப் பற்றியும் விளக்கிக்கூறி மக்கள் தெளிவு பெறப் பாடுபடவேண்டும். அதுமட்டுமல்ல, நமது அண்டை நாடான சைனாவிலே, காண்டனிலே என்ன நடக்கிறது? அமெரிக்காவிலே நடைபெறும் சேதி என்ன? வாஷிங்டனில் எதைப்பற்றிப் பிரச்சினை கவனிக்கப்படுகிறது? சோவித் ரஷ்யாவில் என்ன பேசப்படுகிறது?

இலண்டனிலே மாஜி ஏகாதிபத்திய பக்தர்கள் என்ன திட்டமிட்டுக் கொண்டுள்ளனர்? சிங்கள ஆட்சியிலே நம்மவர் படும் பாடு, அனுபவிக்கும் கொடுமைகள் என்னென்ன, மலேயாவிலே மனம் பதைத்திடும் மக்கள், பர்மாவிலே போர், காஷ்மீரத்திலே கலகம், திபேத்திலே கம்யூனிஸ்ட்டு புரட்சி வாடை வீசுகிறது, பாக்கிஸ்தானுக்கும் இந்துஸ்தானத்திற்கும் இடையே பகை, உள்ளூரப் புகைந்து கொண்டிருக்கிறது. என்பன போன்ற பற்பல நிகழ்ச்சிகளை அறியவேண்டும். அதன் விளைவு என்னவாகும்? நமக்கு அதனால் என்ன படிப்பினை என்று சிந்திக்க வேண்டும். அதனை மக்களுக்கு எடுத்துக் கூறவேண்டும், அப்படிப்பட்ட பிரச்சினைகள் நமக்கு முக்கியமாக இருக்கவேண்டும்.

ஆக்க வேலை தொடங்கவேண்டும்

பெரியார், அவரது திருமணம், மணியம்மை இவை வேண்டுமானால் இன்று பெரு உருவிலே நம் கண்முன் காட்சியளிக்கலாம். நாம் அதைவிட்டு விலகிவிட்டோம். வேறு கழகமும் அமைத்துவிட்டோம்; இனி ஆக்க வேலை தொடங்க வேண்டும், நாட்டுக்கு நற்பணி புரிய வேண்டும். ஆட்சியாளரால், நாட்டு மக்களுக்கு நேரிடும் கேடுகளை மக்களுக்கு எடுத்துக் காட்டி விளக்கி, நல்லாட்சி ஏற்படுத்த பணிபுரிய வேண்டும். நமது கொள்கைகள் நமக்கு மிகவும் பிடித்தவைகள்; நமக்குப் பிடித்தவைகள் என்பது மட்டுமல்ல நாட்டுக்கு மிக மிகத் தேவையானவை என்பதுங்கூட. நம் உள்ளத்தில் நெடுங்காலமாய் ஊறிப்போனவை; ஜீவசக்தி வாய்ந்தவை. அதனைக் கடைப் பிடித்து முன்னேறிச் செல்வோம். நம் நாட்டு நிகழ்ச்சிகளையும், உலக விவகாரங்களையும் ஊன்றிக் கவனித்து, உபயோகமானவற்றை ஊர் மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்.

பண்டிதரும் பழமையும்

நீங்கள் பத்திரிகைகளிலே படிக்கிறீர்கள் பல நாட்களாக, நேரு அமெரிக்கா போயிருப்பதைப் பற்றி. அவர் அமெரிக்கா போகிறார் என்பது நமக்குப் பூரிப்பு — பெருமையுங்கூட. ஏன்-உலக வல்லரசு ஒன்று. பலம் பொருந்திய நாடு ஒன்று 200 ஆண்டுகள் அடிமை நாடாக இருந்து சமீபத்தில் விடுதலை பெற்ற நாட்டின் பிரதமரை மதித்து வரவேற்பது சிறப்புதானே! உலகச் சரித்திரத்திலே முக்கிய நிகழ்ச்சி என்பது மட்டுமல்ல, முன்னணி நிகழ்ச்சி என்று கூட சொல்லலாம். நேரு அமெரிக்கா செல்ல விமானக்கூடம் சென்று விமானம் ஏறினார். அவரை விமான நிலையம்வரை சென்று அன்பர் ஆச்சாரியாரும், படேலும் வழியனுப்பினர். நல்ல காரியந்தான். இதனைப் படம்பிடித்துச் சினிமாக்களில் கூடக் காட்டுகின்றனர். படம் பிடித்துப் பத்திரிகைகளிலும் போட்டிருக்கின்றனர். அந்தப் படத்தை நீங்கள் கூர்ந்து கவனித்துப் பாருங்கள். பண்டிதரின் நெற்றியில் மங்களகரமான குங்குமப் பொட்டு ஒன்று வைத்திருப்பதைப் பார்க்கலாம். திராவிட முன்னேற்றக் கழகம் இதனைக் கவனிக்க வேண்டும். பண்டிதர் நேரு, பல்கலையும் உணர்ந்த நேரு போகிறார் அமெரிக்க நாட்டிற்கு, இந்தியாவின், ஆற்றலை விளக்க. அவர் விமானத்தில் ஏறிச் செல்லுகிறார் அமெரிக்காவிற்கு. அப்போது அவருக்கு ஆசீர்வாதமாக குங்குமம் இடப்படுகிறது நெற்றியில். அவர் ஏறிச் செல்கிறார், ஜாதிகள் இல்லாத நாட்டான் கண்டுபிடித்த செய்த விமானத்தில், ஜாதிகள் நிறைந்த நாட்டின் பிரதமர் பண்டித நேரு போகிறார், நெற்றியில் பழமையின் சின்னமான குங்குமப் பொட்டை அணிந்து கொண்டு. இக்காட்சி எதை நினைவூட்டுகிறது தெரியுமா? நல்ல அழகான டயர்(Rubber Tyre) போட்ட வண்டியில் பழைய கோட்டை இரட்டைக் காளைகளைப் பூட்டி ஓட்டிச் செல்வதைத்தான்.

என்ன எண்ணுவர் மக்கள் ?

இதைச் செய்வது யார்? படித்த பண்டிதர் நேரு. அகில உலகும் அறிந்த பண்டிதர் நேரு, குளத்தங்கரைக் குப்பண்ணய்யங்காரல்ல, கோடி வீட்டுக் குப்பனுமல்ல. விஞ்ஞானமறியாத வைதிகனுமல்ல; கிருத்திகை, அமாவாசை கொண்டாடும் சாதாரண சாமிநாதனுமல்ல. பண்டிதர் நேரு, பலவும் கற்றவர். பிரதமர். ஆங்கில அறிவு பெற்றவர். அகில உலக நிலையறிந்தவர். ஆற்றல்மிக்கவர்; பற்பல போராட்டங்களை நடத்திச் சென்றவர். நன்கு பேச எழுதப் பழக்கப்பட்டவர். பண்பும் பயிற்சியும் கொண்டவர். அப்படிப்பட்ட பண்டித நேரு, பழமையின் சின்னத்தை விடவில்லை; தயங்குகிறார். ஏரோப்பிளேன் ஏறி அமெரிக்கா செல்லும் அவரது நெற்றியில் குங்குமப்பொட்டு இடப்படுகிறது. இக்காட்சி, பத்திரிகைகளில் படம்போட்டுக் காண்பிக்கப்படுகிறது. இப்படிப்பட்ட நிலையில் நம்முடைய சுயமரியாதைப் பிரசாரம் என்னாவது? நாம் நாட்டு மக்களைப் பார்த்து அப்பா விபூதி பூசாதே—வீண் வேலை அது. திருநாமம் சாத்தாதே; திருத்துழாய் அணியாதே; கிருத்திகை விரதம் கொள்ளாதே; கொண்டாடாதே; இவையெல்லாம் நேரக்கேடு. திருவிழா வேண்டாம், தேர் இழுத்துத் தேயவிடவேண்டாம், செல்வத்தை; திருப்பதிக்குப் போகாதே, பழனிக்குப் போய் மொட்டையடிக்காதே என்று பிரசாரம் செய்தால் என்ன நினைப்பர், கூறுவர் பாமர மக்கள்; பண்டிதரின் படத்தை, குங்குமப் பொட்டோடு கூடிய படத்தை பார்க்கும்போது. இதனால் நாட்டில் நம்முடைய நல்லறிவுப் பிரசாரம் சற்றுத் தடைபடும், கொஞ்சம் பங்கமடையத்தானே செய்யும். என்னப்பா நீ ஏதேதோ பேசுகிறாய். கிருத்திகை கூடாதாம், விபூதி பூசக்கூடாதாம். விசித்திரமான பேச்சு. பார், பார் எங்கள் பிரதமர் பண்டிதர் ஏரோப்பிளேன் ஏறி அமெரிக்கா செல்லும்போது கூட, அவரது நெற்றியில் குங்கும திலகம் காட்சியளிக்கிறதே அவர் என்ன விவரமறியாதவரா? அவருக்குத் தெரியாததா; என்று பாமர மக்கள் பேசுவர்; எண்ணுவர்.

சிறு விஷயந்தான்; ஆனால்...?

பண்டித நேரு அமெரிக்கா செல்வது நேசத்திற்காக. அதுவும் அமெரிக்கத் தலைவர் ட்ரூமன் அழைப்பின் பேரில். அவர் செல்வது தேசத்தைப் பலப்படுத்த. கடன் வாங்க அல்ல. சில நாட்களுக்கு முன், ஆங்கில நாட்டு மந்திரி சர். ஸ்டாபோர்டு கிரிப்ஸ் அமெரிக்கா சென்றார். அவர் சென்றது கடன் வாங்க. நேசத்திற்காக அல்ல. ஆனால் அவர் அமெரிக்கா புறப்படு முன் மாதா கோவிலுக்குச் சென்று மண்டியிட்டுப் புறப்பட்டதாகச் செய்தி வரவில்லை. கடன் வாங்கப் புறப்பட்ட கிரிப்ஸ் மாதா கோவில் போகவில்லை, புறப்படுமுன். ஆனால் நேசத்திற்காகச் செல்லும் நேருவுக்குத் திலகமிடப்படுகிறது புறப்படு முன். என்ன வித்தியாசம், பார்த்தீர்களா? 'என்னப்பா, நீ, சிறு குங்குமப் பொட்டுதானே, இருவருக்கும் வித்தியாசம். சிறு குங்குமப் பொட்டைக் கொண்டு இவ்வளவு குதர்க்கம் பேசுகிறாயே என்று கேட்கத் தோன்றும் பலருக்கு. 'சிறு விஷயந்தான், சிறு குங்

[தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க]

அடக்குமுறை ஆட்சி...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

கும்ப் பொட்டுத்தான் வித்தியாசம். ஆனாலும் அவ்வளவு பெரிய, படித்த பண்டிதர் நேரு கூட இவ்வளவு சிறிய விஷயத்தை விடவில்லையே, விட முடியவில்லையே என்று தான் கூறுகிறேன்.

படித்த பண்டிதரால்கூட பழக்க வழக்கத்தை மீறமுடியவில்லை, பழமைப் பாசத்தைக் கட்டுப்படுத்த முடியவில்லை. பழைய முறையை மாற்றத் தைரியமில்லை, தடுக்க முடியவில்லை, என்று தான் எடுத்துக் காட்டுகிறேன்.

தனி நாகரிகம்

பண்டிதர், தனது அமெரிக்கப் பேச்சு ஒன்றிலே குறிப்பிட்டுள்ளார். அதாவது, இந்தியா, பல நாட்டு நாகரிகத்தையுமகைக்கொண்டுள்ளது. ஆனாலும அது தனக்கென்றுள்ள ஓர் தனி நாகரிகத்தை விடவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். அந்தத தனி நாகரிகத்தின்பாற்பட்டது தான் இந்தச் சிறு குங்குமப் பொட்டும. இது மட்டுமா! ஒரு வாரத்திற்கு முன், பரந்த இந்தப் பரதகண்டத்தின், இமயம் முதலிய மலைகளையுடைய, காவிரி, கங்கை, யமுனை முதலிய நதிகளையும் கொண்ட இந்நாட்டின் கவர்னர் ஜெனரல் தசரா பண்டிகையிலே கலந்துகொண்டார். அப்போது இரண்டு பகல் வேஷக்காரர்கள் இராமர், இலட்சுமண வேடம் பூண்டு நடித்தனர். இந்தப் பகல வேஷக்காரர்களைப் பாராட்டி, கவர்னர் ஜெனரல் இராஜகோபாலாச்சாரியார் அவர்கள், நெற்றியிலே திலகமிட்டார், இக்காட்சி படம் பிடிக்கப்பட்டு சினிமாவாகப் பண்டிதருக்கு முன்னால் அமெரிக்கா போய்விட்டது. பண்டிதர் குங்கும திலகத்தோடு புறப்பட்ட காட்சியும் படமாகப் போய் விட்டது அவருக்கு முன் அமெரிக்காவிற்கு. இதைக் காணும ட்ருமன், ஆகட்டும, அமெரிக்க மக்களாகட்டும் என்ன எண்ணுவர்?

நாட்டின் நிலை எப்படி உயரும்?

இதைக்காணும் அமெரிக்கர் நம்மை என்னவென்று மதிப்பர். உன்னூர என்ன எண்ணுவர். பழமைப்பிடியிலிருந்து மீற முடியவில்லை. தன் நாட்டு மக்களை மூடநம்பிக்கையில மூழ்கடித்திருக்கிறார்கள். மக்களிடை குடிபுகுந்துள்ள கெட்ட எண்ணங்களை மாற்றினாரில்லை, என்று தானே எண்ணுவர், எண்ணும்படி செய்யும இத்தகைய காட்சிகள் கொண்ட படங்கள் பிறகு நம்மிடம் எப்படிஉள்ள படியான மதிப்பு ஏற்படும்.

நாட்டிலே நல்லறிவுப் பிரசாரம நடக்க நாம் பாடுபட வேண்டும். இத்தகைய நிலை ஏற்படும்போது நாம நாட்டு மக்களுக்கு விஷயத்தை விளக்க வேண்டும். பொது அறிவு வளரப் பாடுபடவேண்டும், பகுத்தறிவு பரவ வேண்டும. மக்கள் மனதிலேயுள்ள பழமைப்பித்தும், பழக்க வழக்கத்திற்குப் பயபபடும் தன்மையும் மாற வேண்டும. இத்துறையில் நாடு முன்னேற வேண்டும். அது வரையில என்ன தான் பாடுபட்டாலும், படேல்கள் பேசினாலும், பல தேவ்சிங்குகள் எவ்வளவு ராணுவங்களைத் திரட்டினாலும, நேருக்கள் நேச நாடுகளோடு நெருங்கிய தொடர்பு கொண்டாலும் நாட்டின மதிப்பு வளராது மக்கள மனப் பண்பு வளரா முன நாட்டின் நிலை எப்படி உயரும், உயர முடியும்?

ஆயுத பூஜை!

மக்கள் மனவளம்பெற, மத பேதங்களை ஒழிக்க, நாட்டைப புது உருவாக்க, புது எண்ணத்தை உண்டாக்க, எல்லோரும ஓர் குலம் என்ற ஈடு இணையற்ற கொள்கையை நிலை நிறுத்த, நாடு நல நிலையடைய, ஜாதிபேதங்களைத் தொலைக்க, மூட நம்பிக்கையை முறியடித்தாக வேண்டும். அதுவே நமது வேலை, திட்டம், முன்னணித்திட்டம. நேற்று சரசுவதி பூஜை கொண்டாடப்பட்டது நாடெங்கும். ஆயுத பூஜையிலே உழவன் ஏர், கலப்பை வைக்கப்பட்டது. ஆலைத் தொழிலாளியின ஸ்குரு டிரைவர் இருநதிருக்கும, மோட்டாரின் ஒரு பாகம, இன்னும் பற்பல இருக்கும. ஆனால் டெலஸ்கோப் வைத்தோமா! டெலிபோன் உண்டா, இன்னும் இதுபோன்ற நவீன ஆயுதங்களை வைத்தோமா! இலலை. நமக்குப் புது ஆயுதங்கள் ஏது? நமது கடவுளர்க்கே நாம ஏற்படுத்தியுள்ள ஆயுதங்கள் விசித்திரம தானே! சிவனுக்குத் திரிசூலம; மகாவிஷ்ணுவுக்குக் கோதண்டம், பிரமனுக்குப் பிரமம பத்திரம், சைவனுக்கு ருத்திராட்சம், வைணவனுக்குத துளசிமாலை, இந்த முறை தானே இங்கு சரசுவதி பூஜை கொண்டாடும் நம நாட்டில் படித்தவா நூற்றுக்குப் பத்துப் பேர்தான. சரசுவதி பூஜை கொண்டாடாத மேல் நாட்டில, படித்தோா தொகை நூற்றுக்குத் தொண்ணூற்று ஒன்பது பேர். ஏன் இந்த நிலை, மகத்தான மாறுபாடு, வித்தியாசம்? மேல் நாட்டில எத்தனையெத்தனை புதுப்புது ஆயுதங்கள் தோன்றியுள்ளன. நம நாட்டில்எங்கே! ஏதாவதுஉண்டா? ஏன் நம நாட்டில், கலைஞர்கள் விஞ்ஞானிகள், காங்கிரசினா கம்யூனிஸ்டு கட்சியினர், சோஷியலிஸ்டுகள் மற்ற எவாதானுகட்டும இத்தகைய மாறுதலுக்கு, மக்களிடை ஏற்பட வேண்டிய மனமாறுதலுக்குப் பாடு படக்கூடாது என யாவரும ஒன்று பட்டு ஒருமித்த முயற்சி செய்யக் கூடாது. தேவை, மிகமிகத தேவை. இத்தகையதொரு கூட்டு முயற்சி மிகவும தேவை.

(தொடரும்)

இனி நடப்பவை

கூடலூர்—மதுரை மாவட்டம் கூடலூரில், 25—10—49 செவ்வாய் மாலை 7-மணிக்கு தி. மு. கழகம்—கூடலூர் கிளையின் துவக்க விழாவும், கொடியேற்று விழாவும இவ்வூர் பழைய பேருந்து நிலையத்தில் நடைபெறும். அதுபோது, தோழர் வி. பரமன் தலைமையில், தோழர்கள் ஏ. வி பி. ஆசைத்தம்பி, இரா. துரைராசன் பி. ஏ., ஆகியோர சொற்பொழிவாற்றுவா.

* * *

மமுசாபுரம் — திராவிட முன்னேற்றக் கழக இவ்வூர்க் கிளையின் துவக்க விழா, 30-10-49 ஞாயிறு அன்று நடைபெறும். அதுபோது அருப்புக்கோட்டைத் தோழர் எம். எஸ். [illegible]மசாமி அவர்கள் சொற்பொழி[illegible]றுவார்.

* * *

பெங்களூர் (சிட்டி) — இந்நகர் தி. மு. கழக அமைப்புக் கூட்டம், 30—10—49 ஞாயிறு மாலை 6-மணிக்குக கலாசிபாளையம மெயின் ரோடிலுள்ள 5/4 எண்ணுள்ள கடையில் நடைபெறும். அதுபோது தி. மு. கழக ஆதரவாளர்கள் அனைவரும் வந்து கலந்துகொள்ளும்படித் தோழர் ஆ. ந. ஈசுவரன் வேண்டுகிறார்.

* * *

சென்னை—சென்னை சிந்தாதிரிப் பேட்டை உயர்நிலைப்பள்ளியில், 28—10—49 வெள்ளி மாலை 4-15 மணிக்கு, தலைமையாசிரியர் தோழர் ப. தனக்கண்ணு அவர்கள் தலைமையில், தோழா இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'தமிழர்வீரர்' என்னும் தலைப்பில் சொற்பொழிவாற்றுவார்.

* * *

சென்னை-சென்னை, எழுகிணறு, குட்டிமேஸ்திரி தெரு 36-வது எண்ணுள்ள வள்ளுவர் மன்றக் கட்டிடத்தில், 25 10-49 செவ்வாய் மாலை 6-மணிக்கு, மன்ற சார்பில் புலவர் தோழர் ஆர். எஸ். ராமன் அவர்களால் குறள் வகுப்பு நடத்தப் படும்.

* * *

தாம்பரம் — சென்னை, தாம்பரம் கிருத்தவக் கல்லூரி தமிழ்ப் பேரவையில் 26—10—49 புதனகிழமை, மாலை 5 மணிக்கு வள்ளுவர் விழா நடைபெறும. கூட்டத்திற்கு தோழர் கா. அப்பாதுரை, எம். ஏ. எல். டி. அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் இரா. நெடுஞ்செழியம் எம். ஏ. அவர்கள் சொறபொழிவாற்றுவார்.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

25-10-49

கூடலூர் (மதுரை) :—ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். உத்தண்டன், இரா. துரைராசன

தியாகதுருக்கம்:— என. வி. நடராசன், ஏ. சித்தையன்

26-10-49

தேனி:— ஏ. வி. பி ஆசைத்தம்பி

30-10-49

நாகப்பட்டினம்.:— இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், இராமாமிர்தத்தம்மையார.

பவானி:— மா. இளஞ்செழியன

சமுதாய, பொருளாதார அரசியல் விடுதலை வேண்டும்

பல்லடம் தி. மு. கழக துவக்க விழா வைபவம்

[நேற்றைய தொடர்ச்சி]

பல்லடம், அக். 19—

"நாம் எந்த உருவில் காட்சியளித்த போதிலும், அது சுயமரியாதை இயக்கமானாலும் சரி, ஜஸ்டிஸ் கட்சியானாலும் சரி, தமிழர் இயக்கமானாலும் சரி, திராவிடா கழகமானாலும சரி, திராவிட முன்னேற்றக கழகமானாலும் சரி, எந்த உருவில் இருந்தாலும் பேசுவது, பகுத்தறிவுப் பிரசாரமேயாகும்.

என்று பல்லடம் தி மு. க துவக்க விழாவில், தோழர் அண்ணாதுரை எடுத்துரைத்தார்.

19—10—49ல் பல்லடம் பஸ்டாண்டில் திராவிட முன்னேற்றக் கழகத்துவக்க விழா நடைபெற்றது. அண்ணாதுரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈரோடு சந்தானம், ஈரோடு. எஸ். அப்பாவு, நடிகர் டி. வீ நாராயணசாமி ஆகியோர் பகல 3 மணிக்கெல்லாம் பல்லடம் வந்து சேர்ந்தனர். யாவருக்கும் பல்லடம்தோழர்களால் விருந்து அளிக்கப்பட்டது. மாலை 4—30 மணிக்கெல்லாம் மக்கள் திரள் திரளாகக் கூடிவிட்டனர். மாணவர், குடியானவர், பெண்கள், தாய்மார்கள் முதல் அனைவரும் கூடியிருந்து விழாவைச சிறப்பித்தனர். கூட்டம் ஆரம்பமாகு முன் பல்லடம் தோழர்கள், அண்ணா, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி ஆகியோருடன் அமர்ந்து புகைப்படம் எடுக்கப் பட்டது. பின்னர் சரியாக 5 மணிக்குத் துவக்கவிழா ஆரம்பித்தது தோழா பெத்தாம்பாளையம் பழனிச்சாமி அவர்களை விழாவிற்குத்தலைமை வகிக்கும்படி, தோழர் பல்லடம் பொன்னுசாமி அவர்கள் கேட்டுக்கொண்டார்.

தோழர் எஸ். ஏ. மாணிக்கம் அவர்கள், அண்ணாதுரை, விழாத் தலைவர் பெத்தாமபாளையம் பழனிச்சாமி மற்றும் யாவரையும வரவேற்றுப்பேசினா.

பின்னர், தலைவர் தி. மு. க. தோற்றத்தின் அவசியத்தை விளக்கினார். அடுத்தபடியாக, தோழர் அண்ணாதுரை அவர்கட்கு பல்லடம் நகர தி. மு. கழகத்தினரால், ஒரு வரவேற்புப் பத்திரம் வாசித்து அளிக்கப்பட்டது. பின்னா கீழ்க்கண்ட கழகங்கள் அண்ணாவுக்கு வாழ்த்துக் கூறி, மலர்மாலை அணிவித்தனர்.

1. தி. மு. க. பல்லடம்.
2. தி. மு. க. சூலூர்.
3. தி. மு. க. மாதப்பூர் பிர்க்கா.
4. தி. மு. க. வாரப்பட்டி பிர்க்கா.
5. திருப்பூர் நகர, தி. மு. இளைஞர் கழகம்.
6. கல்லா கவுண்டம்பாளையம் விவசாய சங்கம்.
7. ஈடுவாய்(பல்லடம் பிர்க்கா) சுதந்திர தொழிலாளர் சங்கம்.
8. பூக்கடை தொழிலாளர் சங்கம்.
9. மாதப்பூர் வியாபாரிகள் சங்கம்.
10. பல்லடம் விவசாயிகள் சங்கம்.
11. பல்லடம் தையல் தொழிலாளர் சங்கம்.
12. பல்லடம் தி. மு. க.

பின்னர் ஈரோடு தோழர் எஸ் அப்பாவு அவர்கள், சிறிது நேரம் கழக நிலையை விளக்கிப் பேசினார். கடைசியாக அண்ணாதுரை அவர்கள் சிறந்ததொரு சொற்பொழிவாற்றினார்.

அவர் தமது பேச்சின் முற்பகுதியில், திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து தி. மு. க. தோன்றியதன் காரணங்களைக் கூறினார்.

நாம் எந்த உருவில் காட்சியளித்தபோதிலும், அது சுயமரியாதை இயக்கமானாலும் சரி, ஜஸ்டிஸ் கட்சியானாலும் சரி, தமிழர் இயக்கமானாலும் சரி, திராவிடர் கழகமானாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகமானாலும் சரி, எந்த உருவில் இருந்தாலும் பேசுவது, பகுத்தறிவுப்பிரசாரமேயாகும் என்று விளக்கினார்.

திராவிட நாட்டின் இன்றைய நிலை பற்றியும், ஆட்சியாளரின் அடக்கு முறைப்போக்கு பற்றியும், பொது மக்கள் சிந்தித்துப் பார்த்து, ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டார். திராவிட முன்னேற்றக் கழகத்தின் மூலம் நாட்டிலே நல்லறிவுப்பிரசாரப்பணி புரிந்து, சமுதாய; பொருளாதார அரசியல் விடுதலையைப் பெறுவதுதான் நோக்கமென்பதையும் எடுத்துரைத்தார. கூட்டம் 6 மணி அளவில் நன்றி கூறுதலுடன் இனிது முடிந்தது.

திராவிட முன்னேற்ற இளைஞர் கழகம்

ஆத்தூக்குடி, அக். 18—

ஆத்துக்குடி. வடக்கூர் திராவிட முன்னேற்ற இளைஞா கழகத்தின் செயற்குழுத் தோதல கூட்டம், தோழர் பி. சிதம்பரம அவர்கள் தலைமையில் 16-10-49 அன்று நடைபெற்றது. அதுபோது. சென்ற ஆண்டுச செயற்குழுவினர்களுக்குப பாராட்டு தெரிவிக்கபபட்டுப் புதிய செயற்குழுவினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்- வி. சாமுவேல்; பொருள் உறுப்பினா- எஸ். முத்துவேல்; விளம்பர உறுப்பினா- எம. இளங்கோவன்; ஏனைய செயலுறுப்பினாகள்:— பி. மனோகரன், பி. அய்யம்பெருமாள், பிரான்சிஸ், எம். சணமுகம் (கணக்குத் தணிக்கையாளா) பின்பு செயலாளர்நன்றி நவிலக் கூட்டம் முடிந்தது [செ-ர்]

விளம்பரம்

ஒருபத்தி ஒரு அங்குலம் ரூ5—0—0

நீண்ட கால ஒப்பந்த விபரங்களுக்குச் சலுகை காட்டப்படும்.

—மானேஜர்

அறிவிப்பு

ரெஜிஸ் முட்டை பவுடர், முட்டைப்பூச்சி, எறும்பு முதலியவைகளை நாசமாக்கி அயர்ந்த நித்திரை தருகிறது. சாம்பிள் டின் 1-க்கு 8 அணா ஸ்டாம்பு அனுப்பவும். G. பழனியப்ப முதலியார், மதுரை

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.